பாரதிய ஜனதா கட்சி, தமிழ்நாடு

மாநில செயற்குழு கூட்டம் - இராஜபாளையம் (விருதுநகர்)

# தீர்மானங்கள்

## 1. தங்க மகன் வாஜ்பாய்

பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கிய தலைவர், தேசத்தை ஒளிரச்செய்த தங்க மகன் , சுதந்திர போராட்ட வீரர், நேர்மையான அரசியல் தலைவர், பொது வாழ்க்கையின் இலக்கணமாக திகழ்ந்த மாபெரும் தலைவர், பாரத ரத்னா ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் இந்தியத் திருநாட்டை தொலைநோக்கு சிந்தனையுடன் அடுத்த உயரத்திற்கு எடுத்து சென்று வல்லரசாக மாற்றிகாட்டியவர். தொழில், உற்பத்தி, விவசாயம், என பல்வேறு துறைகளில் புதிய திட்டங்களை புகுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் முன்னாள் பிரதமர், பாரத ரத்னா ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் மறைவு இந்த தேசத்திற்கே பேரிழப்பு. அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், இந்திய மக்களுக்கும், பாரதிய ஜனதா கட்சியின் தொண்டர்களுக்கும், செயற்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறது.

## 2. காவிரி - நீர்மேலாண்மை

182 ஆண்டுகள் பழமை வாய்ந்த முக்கொம்பு அணை சமீபத்திய காவிரி ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. ஆற்றில் மணல் அள்ளும் குவாரிகள் அமைத்து அளவுக்கு அதிகமாக மணல் அள்ளியதால் தான் முக்கொம்பு அணை தகர்ந்திருக்கிறது. நாளை இதே நிலை கல்லணைக்கும் ஏற்படலாம். எனவே அனைத்து ஆறுகளிலும் அணைகள், பாலங்கள் அமைந்திருக்கும் பகுதிகளில் குறிப்பிட்ட கிலோமீட்டர் தூரத்தில் ஆற்று மணல் அள்ளுவது, குவாரிகள் அமைப்பது முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும் என்றும் அதற்குரிய அவசர நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்திட வேண்டும்.

தமிழகத்தின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையாலும், காவரியில் மழை வெள்ள நீர் பெருக்கெடுத்து வந்ததாலும் முக்கிய நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது ஆனால் காவிரி, வைகை உள்ளிட்ட பல ஆறுகளின் கடை மடைப்பகுதிகளுக்கு தண்ணீர் சென்று சேரவில்லை. மழையின் பயன்கள் பெரும்பாலான விவசாயிகளுக்கும், மக்களுக்கும் கிடைக்காமல் போய்விட்டது. இந்த நிலை தொடர்ந்து ஏற்படாமல் இருந்திட தமிழக அரசு, தலை சிறந்த வல்லுநர்களைக் கொண்டு **“நீர் மேலாண்மை திட்டத்தை”** உருவாக்கி போர்க்கால அடிப்படையில் செயல்பட வேண்டும். தமிழகத்தின் மிகப் பெரிய ஏரியான வீராணம் ஏரியை சீர்படுத்த போதுமான நிதி ஒதுக்கியும் அது முழுமையாக பயன்படுத்தப்படாத காரணத்தினால், வீராணம் ஏரியின் முழு பயனும் மக்களுக்கு கிடைக்கவில்லை. இது போன்று நபார்ட் வங்கிகள் மூலம் கிடைத்திருக்கும் நிதியினை ஏரி, குளம் சீரமைப்பிற்கு முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

“ **நதிநீர் இணைப்பு** “ என்ற திட்டத்தை அறிமுகம் செய்தது பாரதிய ஜனதா கட்சி தான். வாஜ்பாய் அவர்களின் கனவான இத்திட்டத்தை, தற்போதைய அரசு வெகு அக்கறையோடு செயல்படுத்தி வருகிறது. காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைத்து, தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டியுள்ளது. ஆதே போன்று கோதாவரி – காவேரி நதிகள் இணைப்புத்திட்டத்திற்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பாலாறு - பெண்ணையாறு இணைப்புத் திட்டத்திற்கும் நிதி உதவி அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவையனைத்திற்கும் மத்திய அரசிற்கும், பிரதமர் மோடி அவர்களுக்கும் இச்செயற்குழு பாராட்டுகளை தெரிவிக்கிறது.

சேலம் மாவட்டம் வாழப்பாடி வஷிஷ்ட நதி இணைப்பு, திருவண்ணாமலை மாவட்டம் நந்தன் கால்வாய், ஸ்ரீவில்லிபுத்துற்ர் பகுதியில் அழகர் அணை, வாசுதேவநல்லூர் பகுதியில் செண்பகவல்லி அணைக்கட்டு, கொள்ளிடம் பகுதியில் கதவணைகள் திட்டம், திருச்செந்தூர் தேரி பகுதியில் தாமிரபரணி, வெள்ள உபரி நீர் சேமிப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் சீரமைக்கபடாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இந்த பணிகளை மாநில அரசு கவனம் கொடுத்து செயல்படுத்த வேண்டுமென்று இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## 3. விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு

சமீபத்தில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா 15 தங்கம், 24 வெள்ளி, 30 வெண்கலம் என 69 பதக்கங்களைப் பெற்றது. தமிழகத்தைச் சார்ந்த தருண் அய்யாசாமி, ஆரோக்கியராஜ், கே.சி.கணபதி, பிரஜ்னேஷ் குன்னேஸ்வரன், சரத் கமல், சத்தியன், அமல்ராஜ், பி.ஆர்.ஸ்ரீஜேஷ், வருண் உள்ளிட்ட தமிழக வீரர்களுக்கும், இந்திய வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இச்செயற்குழு தெரிவித்துக்கொள்கிறது.

இலங்கையில் நடைபெற்ற உலக அளவிலான ரோல்பால் ஸ்கேட்டிங் போட்டியில் வெள்ளிபதக்கம் பெற்ற C.S.மைமாஸ்ரீ, தங்கப்பதக்கம் பெற்ற C.S.பூர்விகாஸ்ரீ மற்றும் ஆசிய அளவில் துபாயில் நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில், மும்பை தமிழ்செல்வன் (புதுக்கோட்டையை சேர்ந்தவர்) ஆகியோருக்கும் இச்செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

சதுரங்க விளையாட்டில், உலகிலேயே இளம் வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற, தமிழக வீரர், சென்னையைச் சார்ந்த 13 வயது சிறுவன் பிரக்யானந்தாவிற்கு , செஸ் விளையாட்டில் உலகத் தரத்திற்கு இணையான பயிற்சி பெற, 50 லட்சம் ரூபாய் வழங்கிய மத்திய அரசிற்கு தமிழகத்தின் சார்பில் இச்செயற்குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**4. தாமிரபரணி – மகாபுஷ்கர விழா**

நெல்லை, தாமிரபரணி நதிக்கு 144 ஆண்டுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் மகாபுஷ்கர விழா அடுத்த மாதம் 11ந்தேதி முதல் 12நாட்கள் நடைபெற இருக்கிறது. புஷ்கர விழாவின் போது தாமிரபரணியில் நீராடுவதற்கு லட்சம் கணக்கான பக்கதர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். தாமிரபரணி தொடங்கி முடியும் இடம் வரை 148 கட்டங்கள் நீராடுவதற்கு இருந்து வந்தன. அவற்றில் இப்போது 117 கட்டங்கள் மக்கள் பயன்படுத்தும் நிலையில் உள்ளன. ஆனால் 18 கட்டங்களில் மட்டும்தான் மக்கள் நீராடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை பக்தர்கள் வசதியை கருதி அதிகரிக்க வேண்டும்.

திருநெல்வேலி போன்ற நகர், பேரூர் பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே இடத்தில் கூடி நீராடும் நிலை உள்ளது. எனவே தாமிரபரணி மகா புஷ்கர விழாவில் பக்தர்கள் சிரமங்கள் எதுவுமின்றி பங்கேற்கவும், அதற்குரிய கட்டமைப்பு, சுகாதார, பேரிடர் பாதுகாப்பு ஏற்பாடுகளை தமிழக அரசு மிகுந்த கவனம் கொடுத்து விரைந்து செய்திட வேண்டுமென்று இச்செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**5. விநாயகர் சதுர்த்தி கட்டுப்பாடுகள்**

இந்துக்களின் பண்டிகைகளில் நாடு முழுவதும் மிக விமர்சையாக நடத்தப்படும் பண்டிகையாக விநாயகர் சதுர்த்தி திகழ்கிறது. தமிழகத்திலும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் விநாயகர் ஊர்வலம் கடந்த 35 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. மக்கள் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் மிகுந்த ஆர்வத்தோடும், பக்தியோடும் விநாயகர் சிலைகளை வைத்து வழிபட்டு பின்னர் கடலில், நீர்சேமிப்பு தளங்களில் கரைத்து வருகிறார்கள். இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 1,25,000 விநாயகர் சிலைகள் நிறுவப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த முறை விநாயகர் சதுர்த்தி விழாவை நடத்துவதில் மாநில அரசு தேவையற்ற கட்டுப்பாடுகளை விதித்தது, பக்தர்களின், இந்து மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது. பெரும்பான்மை மக்களின் சார்பாக நடத்தப்படும் விநாயகர் சதுர்த்தி விழாவை திட்டமிட்டபடி நடத்திட நீதி மன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உருவானது வேதனையளிக்கிறது.

மேலும் தமிழகத்தில் தென்காசி, செங்கோட்டை போன்று பல்வேறு இடங்களில் விநாயகர் ஊர்வலத்தில் திட்டமிட்டு குழப்பத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்த சிலர் முயன்றுள்ளனர். எனவே வரும் காலங்களில் இந்து மக்களின் அனைத்து விழாக்களுக்கும் தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதை தவிர்ப்பதுடன், தகுந்த பாதுகாப்பையும் வழங்கிட வேண்டுமென்று மாநில அரசை இச்செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## 6. மதுவிலக்கு

தமிழகத்தில் ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய அ.இ.அ.தி.மு.க அரசின் முன்னாள் முதல்வர், மறைந்த செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்கள், தனது தேர்தல் வாக்குறுதியாக, படிப்படியாக டாஸ்மாக் கடைகள் மாநிலத்தில் மூடப்படும் என்று மக்களிடம் கூறினார். ஆனால் மதுவிற்கு எதிரான மக்களின் போராட்டங்களுக்குப் பிறகும், தமிழகத்தில் மதுக்கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. மேலும் தினந்தோறும் புதிய கடைகளை திறந்திட மாநில அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. எனவே மக்களுக்காகவே வாழ்கிறேன் என்று கூறிய முன்னாள் முதல்வர் ஜெயல்லிதா அவர்களின் வழியில் ஆட்சி செய்கிறோம் என்கின்ற தமிழக அரசு மதுக்கடைகளை படிப்படியாக குறைத்து, தமிழகத்தை மதுக்கடை இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்று இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## 7. மின்வெட்டு

மத்திய அரசின் "**உதய்**" மின் திட்டத்தில் இணைந்த பிறகு தான் தமிழக மின்வாரியத்தின் இழப்புகள் குறைந்துகொண்டே வருகிறது. சமீபத்தில் நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால், மின்வெட்டு ஏற்பட்டுவிடுமோ என்று மக்கள் அச்சத்தில் இருந்தனர். ஆனால் தக்க சமயத்தில், தமிழக அனல் மின் நிலையங்களுக்கு போதிய நிலக்கரி அனுப்பியும், நிலக்கரி இறக்குமதிக்கு அனுமதி அளித்தும், தமிழகத்தில் மின்வெட்டு ஏற்படும் நிலையை போக்கிட்ட மத்திய அரசிற்கு இச்செயற்குழு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

## 8. தமிழகத்தில் விமான நிலையங்கள்

இந்தியா முழுவதும் 75 விமான நிலையங்கள் செயல்பட்டில் இருந்து வந்தது. "உதன்" திட்டத்தின் மூலம் முக்கிய நகரங்களிலெல்லாம், புதிய விமான நிலையங்களை மத்திய அரசு தொடங்கியதால் இன்று அதன் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்திருக்கிறது. இதற்கென மத்திய அரசை இச்செயற்குழு பாராட்டுகிறது.

கோவை, சர்வதேச விமான நிலையமாக செயல்பட்டு வருகிற போதிலும், அங்கிருந்து உலகின் முக்கிய நகரங்களுக்கு நேரடி விமான்ங்கள் இன்னும் இயக்கப்படவில்லை. அதே போன்று, மிக நீண்ட காலமாக, நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கை முழுமையடையாத்தால் கோவை விமான நிலைய விரிவாக்கம், தாமதப்பட்டு வருகிறது. மாநில அரசு இப்பணியை விரைவுபடுத்த வேண்டும்.

மதுரை விமான நிலையத்தை , சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்திட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, கன்னியாகுமரி , ராமநாதபுரம், ஓசூர் நகரங்களில் புதிய விமான நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதற்கு நன்றியையும் மத்திய அரசிற்கு தெரிவிக்கிறோம்.

## 9. விவசாயிகளின் நலன்

பிரதம மந்திரியின் பயிர்க்காப்பீட்டுத் திட்டங்கள் விவசாயிகளுக்கு நிறைந்த பயனை அளிக்கும் வகையில், பாஜக அரசு ஏற்கனவே இத்திட்டத்தில் பல்வேறு திருத்தங்களை செய்துள்ளது. இதில் மேலும் புதிய திருத்தமாக, காப்பீட்டு நிறுவனங்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கப்பீட்டு இழப்பீடு தொகையை வழங்காவிட்டால், தாமதம் ஏற்பட்ட காலத்திற்கு வட்டியாக 12 சதவீதம் சேர்த்து, இழப்பீடு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

விவசாயப் பொருட்களுக்கு ஒண்ணரை மடங்கு ஆதார விலை கிடைக்க ஏற்பாடு செய்துள்ள மத்திய அரசு, சர்க்கரை ஆலைகளுக்கு புத்துயிர் வழங்கி, அதன் மூலம் கரும்பு விவசாயிகளின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், சர்க்கரை ஆலைகளின் வங்கிக்கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கு, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் கரும்பு உற்பத்தியாளர்களின் நிலுவைத்தொகை உட்பட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்பை உருவாக்கிய மத்திய அரசிற்கு இந்த செயற்குழு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறது.

சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் ஆயிரக்கணக்கான நிலப்பரப்பில் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டு, அதன் மூலம் ஜவ்வரிசி தயாரித்து வருகிறார்கள். அப்பகுதி மக்களுக்கு பெருமளவிலான வேலைவாய்ப்பை வழங்கியுள்ள ஜவ்வரிசி தொழிலில் சிலர் கலப்படம் செய்கிறார்கள். இச்செயல் உண்மையான உற்பத்தியாளர்களை பாதிக்கிறது. எனவே, தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து ஜவ்வரிசியில் கலப்படம் செய்வதை முற்றிலும் தடுத்திட வேண்டும் என்று இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## 10. ஆலயங்களை காப்போம்

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிக அளவில் ஆலயங்கள் அமைந்துள்ளது. ஏறத்தாழ 32 ஆயிரத்திற்கும் அதிகமான கோவில்களும், மடாலயங்கள் , ஆன்மீக, சமய அறக்கட்டளைகள் என 34 ஆயிரம் இருக்கின்றது. இன்று கோவில்களில் உள்ள சுவாமி சிலைகளும், தங்க நகைகளும் திருடு போகின்றன. கோவில்களுக்கு சொந்தமான சொத்துக்கள் தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கோவில் நிவாகங்களில் என்றைக்கு அரசியல்வாதிகள் நுழைந்தார்களோ அன்றே நிர்வாகச் சீர்கேடுகள் தொடங்கிவிட்டன. கோவில்களுக்கு சொந்தமான ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் நிலங்களில் இன்று எவ்வளவு நிலங்கள் மிச்சம் இருக்கின்றது என்ற விவரம் மாநில அரசிடமே இல்லை. பல்லாயிரம் கோடி மதிப்புள்ள சுவாமி சிலைகள் திருட்டுக் கும்பலால் கட்த்தப்பட்டுள்ள நிலையில் ஒரு சில சிலைகள் மீட்கப்பட்டுள்ளது என்பது சற்றே ஆறுதல் அளிக்கிறது.

தமிழகத்திலிருந்து கடத்தப்பட்ட சுவாமி சிலைகள் வெளிநாடுகளில் எந்த பகுதியில் இருந்தாலும் அதை மீட்டுக்கொண்டு வர வேண்டும். ஆலயங்களின் நிர்வாகத்தில் ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும். கோவில் சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட

வேண்டும். இதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு துரித கதியில் எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## 11. தீவிரவாதம் , பிரிவினைவாதம் ஒடுக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவது கவலைக்குரியது. மத்திய புலனாய்வுத்துறை தமிழகத்தில் தீவிரவாதிகளை கைது செய்திருப்பதிலிருந்தே இங்கு பயங்கரவாத அமைப்புகள் செயல்படுவது உறுதி ஆகின்றது. கைது செய்யப்பட்ட தீவிரவதிகள் தமிழக சிறைச்சாலைகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவது தமிழக மக்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. சமீபத்தில் நடைபெற்ற போராட்டங்களை திசை திருப்பி , மக்களை கலவரத்தில் ஈடுபடச் செய்தது தீவிரவாதிகள் தான் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் தெரிவித்துள்ளதும், அதே அறிக்கையை காவல்துறை வெளியிட்டதும் , தமிழகத்தில் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் நடமாட்டத்தை எடுத்துக்காட்டியது. இவர்களால் தமிழகத்திற்கு பேராபத்து நிகழுமோ என்ற அச்சத்தை நமக்கு ஏற்படுத்தியுள்ளது. எனவே தமிழக அரசு தீவிரவாத அமைப்புகளையும் , அதை வழி நடத்துபவர்களையும் கண்காணித்து கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று செயற்குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

## 12. இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம்

2009 ஆம் ஆண்டு போர் விதிகளையெல்லாம் மீறி தன் நாட்டு மக்களை சொந்த நாட்டின் ராணுவமே லட்சக்கணக்கில் கொன்று குவித்த இலங்கை அரசின் இனவாதப் போரினை உலகமே கண்டித்தது. 1,37,000 தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்ட இச்சம்பவத்திற்கு அப்போதைய மத்திய காங்கிரஸ் ஆட்சி துணை போனதை, சமீபத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த இலங்கை முன்னாள் அதிபர் திரு. ராஜபட்சே அவர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார். இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக செயல்படுபவர்கள் போல் நாடகமாடியவர்களின் போலித்தனத்தை ராஜபட்சேயின் பேட்டி உலகத்திற்கே எடுத்துக் காட்டியுள்ளது. இத்தகைய துரோக செயல் புரிந்த அன்றைய மத்திய அரசிற்கு தோள் கொடுத்து, துணையாக இருந்த தி.மு.க உள்ளிட்ட தமிழக அரசியல் கட்சிகளின் தமிழ் விரோத உணர்வை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே வேளை, நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு, இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் புதிதாக 55,000 வீடுகள் கட்டித் தர இருப்பதையும் அறிவித்தார். அதற்கு முதல் கட்டமாக, ரூ.2418 கோடி நிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதமர் அவர்களின் இலங்கை பயணத்தின்போது தலைமன்னாருக்கு ரயில் போக்குவரத்தை தொடங்கி வைத்து , தோட்டத் தொழிலாளர் பகுதிகளுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் நேரில் சென்று பல்வேறு நலத்திட்டங்களையும் அறிவித்தார்.. எனவே, ஈழத்தமிழர்களின் நல்வாழ்விற்கு பல்வேறு உதவிகளை புரிந்து வரும் பாரதப் பிரதமர் மோடி அவர்களுக்கு இச்செயற்குழு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிக்கிறது..

## 13. ஒளிரும் இந்தியா - ஆயுஷ்மான் பாரத்

உலகின் பொருளாதார வளர்ச்சி மிக்க நாடுகளில் இந்தியா 6வது இடத்திற்கு உயர்ந்து இருக்கிறது. 2018-19ன் முதல் பகுதியில் இந்தியாவின் G.D.P , அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.3 சதவீதமாக உயர்ந்திருக்கிறது . பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி என பல்வேறு சீரமைப்பு திட்டங்களை செயல்படுத்தி இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக இருந்து வந்த கருப்புப் பொருளாதாரத்தை பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் ஒழித்துக் கட்டி வருகிறார்.

அனைவருக்கும் வீடு, அனைவருக்கும் காப்பீடு, அனைவருக்கும் ஓய்வூதியம், ஏழை பெண்கள் அனைவருக்கும் எரிவாயு இணைப்பு, தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் அனைவருக்கும் கழிப்பிட வசதி, மாதம் ஒரு ரூபாய்க்கு விபத்துக் காப்பீடு, தினசரி ஒரு ரூபாய்க்கு ஆயுள் காப்பீடு , செல்வ மகள் சேமிப்புத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டம், எளியோருக்கும் சுய தொழில் திறன் பயிற்சி மற்றும் முத்ரா கடன் என எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி ஏழை மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்திருக்கிறார். விவசாய வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி இருக்கிறார்.

இந்த திட்டங்களுக்கெல்லாம் மகுடம் வைப்பது போல உலகின் மிகப் பெரிய ஆரோக்கிய திட்டம் என்று போற்றப்படுகின்ற **“ஆயுஷ்மான் பாரத்”** என்ற தேசிய குடும்ப நல ஆரோக்கிய திட்டத்தை பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று ( 23 செப்டம்பர் 2018 ) தொடங்கி வைக்கிறார். இதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 5 லட்சம் வரையிலான ஆரோக்கிய காப்பீடு கிடைக்கும். 10 கோடி குடும்பங்கள் , 50 கோடி மக்கள் இத்திட்ட்த்தின் மூலம் பயனடைய இருக்கிறார்கள். இது போன்ற மக்கள் நலனிற்காக திட்டங்களை செயல்படுத்தும் பாரதப் பிரதமர் அவர்களுக்கு இச்செயற்குழு பாராட்டுகளை தெரிவித்து மகிழ்வதோடு, இத்திட்டங்களையும், மத்திய அரசின் சாதனைகளையும் அனைத்து மக்களுக்கும் எடுத்து செல்வதென இச்செயற்குழு உறுதி கொள்கிறது.

## 14. தலைவர்களுக்கு இரங்கல்

தமிழ்நாட்டின் மறைந்த முன்னாள் முதல்வர், திராவிட முன்னேற்றக்கழகத்தின் முன்னாள் தலைவர், டாக்டர். கலைஞர் அவர்கள், மக்களவை முன்னாள் தலைவர் திரு.சோம்நாத் சாட்டர்ஜி, திருச்சி இல.கண்ணன் அவர்களின் தாயார் பிரகதாம்பாள், பா.ஜ.க முன்னாள் பொதுச்செயலாளர் திரு.சரவணபெருமாள் அவர்களின் தந்தையார், விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பாளர் திரு.ராமன் அவர்களின் தாயார், வி.எச்.பி மூத்த தலைவர் R.S.நாராயணசாமி அவர்களுக்கும், கேரளாவில் மழை வெள்ளத்தில் உயிரிழந்த மக்களுக்கும், பாகிஸ்தான் ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட இந்திய ராணுவ வீர்ர்களுக்கும், இரண்டு தினங்களுக்கு முன்பாக காஷ்மீரில் தீவிரவாதிகளால் கடத்தி கொலை செய்யப்பட்ட 3 காவலர்களுக்கும் இச்செயற்குழு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறது.